<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 50/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாதையன் | நாள் | 29.04.2024 |
| தகப்பனார் பெயர் | பொன்னப்பன் | | |

**<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால், தெரியும். அ.வ.எண்.50/2019 என்ற வழக்கை யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால், செல்வராஜ் என்பவர் மீது தாக்கல் செய்துள்ளேன். எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், என்னுடைய நிலத்திலுள்ள முட்டுக்கல்லை பிடுங்கி எறிந்துவிட்டு தகராறு செய்ததால், மேற்படி வழக்கை தாக்கல் செய்தேன். அ.வ.எண்.102/2019 என்ற வழக்கை யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால், செல்வராஜ் மற்றும் கந்தன் என்பவர்கள் மீது தாக்கல் செய்துள்ளேன். எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், தடவழி பாத்தியம் கேட்டு மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2) மேற்படி சொத்துக்கள் யாரிடமிருந்து யார் வாங்கியது என்றால், ராமன்னன், சடையன், சின்னதம்பி ஆகியோர்களுக்கு மேற்படி சொத்து ஆதியில் பாத்தியப்பட்டது. மேற்படி நபர்களிடமிருந்து 1978 ம் வருடத்தில் என் தந்தை கிரயம் பெற்றார். அப்போது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால், அப்போது நான் பிறக்கவில்லை. மேற்படி நபர்களிடமிருந்து என் தந்தை எந்த சர்வே எண்ணில் கிரயம் பெற்றார் என்றால், ச.எண்.37/3A ல் கிரயம் பெற்றார். எவ்வளவு விஸ்தீரணம் பெற்றார் என்றால், 1.02 ஏக்கர் நிலம் ஆகும். மேற்படி கிரய ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால், படித்து பார்த்துள்ளேன்.

3) மேற்படி என் தந்தை கிரயம் பெற்ற கிரய ஆவணத்தில் தாவா சொத்திற்கு என்ன சக்குபந்தி விவரங்கள் காட்டப்பட்டுள்ளது என்றால், கிழக்கில் குமாரசாமியின் நிலம், தெற்கில் கந்தன் (எ) கந்தசாமியின் நிலம், மேற்கில் கந்தன் மற்றும் ராமன்னன் ஆகியோரது நிலம், வடக்கில் ராமன்னனின் நிலம் காட்டப்பட்டுள்ளது. மேற்படி 1978 ம்

வருட கிரய ஆவணத்தை தவிர தாவா சொத்து தொடர்பாக என் தந்தை வேறு எந்த பத்திரத்தையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால், சரிதான். மேற்படி என் தந்தையின் பெயரிலுள்ள கிரய ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

4) என் தந்தை 1977ம் வருடத்தில்தான் சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால், வில்லங்க சான்றிதழில் 1977 ல் கிரயம் பெற்றதாக உள்ளது. கிரய ஆவணத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை பத்திரத்தை பார்த்தால் கூற இயலும்.

5) மேற்படி கிரய ஆவணத்தில் ச.எண்.37/3 ல் மொத்தமுள்ள 4.52 ஏக்கர் நிலத்தில் 1 ஏக்கர் நிலத்தை என் தந்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால், கிரய பத்திரத்தில் அவ்வாறுதான் உள்ளது. ஆனால் பட்டாவில் 1.02 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி 0.02 சென்ட் நிலத்தை பொறுத்து என் தந்தை தனியாக ஏதேனும் கிரய ஆவணம் பெற்றுள்ளாரா என்றால், இல்லை. மேற்படி ச.எண்.37/3 ல் என் தந்தை கியரம் பெற்ற நிலங்களுக்கு நான்கு புறமும் அனாதீன நிலமோ, புறம்போக்கு நிலங்களோ இல்லை என்றால், சரிதான்.

6) பிரதிவாதியின் தந்தை கந்தன் மேற்படி ச.எண்.37/3 ல் எவ்வளவு நிலங்களை கிரயம் பெற்றுள்ளார் என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி பிரதிவாதிகளின் நிலம் தாவா சொத்திற்கு எந்த பகுதியில் உள்ளது என்றால், தாவா சொத்திற்கு தெற்கு புறமும், மேற்கு புறமும் உள்ளது. பிரதிவாதிகளின் நிலம் என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி பிரதிவாதிகளின் நிலத்திற்கு தெற்கு புறத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால், அரங்கன் என்பவரது நிலம் உள்ளது.

7) மேற்படி ச.எண்.37/3 ல் என் தந்தை 1 ஏக்கர் நிலமும், மேற்படி கந்தன் 2.05 ஏக்கர் நிலமும், அரங்கன் 1.46 ஏக்கர் நிலமும் கிரயம் பெற்றுள்ளனர் என்றால், சரிதான். என்

தந்தை 1977 ம் வருடத்திலும், மேற்படி கந்தன் 1978 ம் வருடத்திலும், மேற்படி அரங்கன் 1982 ம் வருடத்திலும் அவரவர் சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளனர் என்றால், சரிதான்.

8) என் தந்தை கிரயம் பெற்ற நிலத்தில் மாமூல் தடவழிகளோ அல்லது வேறு ஏதேனும் தடவழிகளோ உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், அவ்வாறு எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேற்படி என்னுடைய நிலத்திற்கும், பிரதிவாதியின் நிலம் பள்ளமாக உள்ளது என்றால், சரிதான். பாதியிடம் பள்ளமாக உள்ளது. எந்த பக்கம் பள்ளமாக உள்ளது என்றால், என் நிலத்தை ஒட்டி தெற்குபுறம் பள்ளமாகவும், பின்பு சமமாகவும் உள்ளது.

9) மேற்படி பிரதிவாதிகளின் நிலத்திற்கு, அதற்கு தெற்குபுறம் உள்ள அரங்கனின் நிலம் மேற்படி பிரதிவாதிகளின் நிலத்தை விடவும் சற்று பள்ளமாக உள்ளது என்றால், சரிதான்.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டூர்.